Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை**

**வாரம் - 14**

**பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்**

**தரம்: 11**

**தொகுப்பு இரா.யசந்தன்**
**கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்**

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

1. "**கணக்காயர்** இல்லாத ஊரும் " என்றதொடரில் **கணக்காயர்** என்பதன் ஒத்தசொல்
   i. கற்பவர் ii ஆசிரியர் iii கணக்காளர் iv மக்கள்
2. "புலன்களோடு கரணமும் **ஆவியும்**" என்றதொடரில் **ஆவியும்** என்றசொல்லின் ஒத்தபொருட் சொல்
   i. மனம் ii புத்தி iii உயிர் iv மெய்
3. மந்திசிந்து கனிகளுக்கு **வான்கவிகள்** கெஞ்சும்" இங்கு **வான்கவிகள்** என்பதன் பொருள்
   i. கவிஞர்கள் ii குரங்குகள் iii தேவர்கள் iv பாடல்கள்
4. "**கொற்றத்தார்** தொழுதுநோக்கி" என்பதில் **கொற்றத்தார்** என்பதன் எதிர்க்கருத்து,
   i. வீரர்கள் ii கோழைகள் iii மன்னர் iv தெய்வம்
5. "**சூழமேதி** இறங்கும் துறையில்" என்றதொடரில் **சூழமேதி** என்பதன் ஒத்தகருத்துச் சொல்,
   i. பசுக்கூட்டம் ii சுறாக்கள் iii எருமைகள் iv மான்கள்
6. இயற்கை நிகழ்ச்சியொன்றின் மீது புலவர் தன் கருத்தை ஏற்றி கூறுவது
   i. மடக்கணி ii உருவகம் iii தற்குறிப்பேற்றம் iv மோனையணி
7. எழுபத்தைந்தாவது ஆண்டின் முடிவில் எடுக்கப்படும் விழா
   i. அமுத விழா ii வெள்ளி விழா iii பவளவிழா iv பொன்விழா
8. பின்வருவனவற்றுள் அரபுச் சொல்லாக அமைவது
   i. ஹிதாப் ii பில்லி iii துட்டு iv போத்தல்
9. 'பாராளுமன்றத்தில் பட்ஜட் (Budjet) மீதான வாக்கெடுப்பு இரண்டு மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றது. பட்ஜட் என்பதன் தமிழ்க் கலைச்சொல்
   i. பாதீடு ii சட்டமூலம் iii பயங்கரவாதசட்டம் iv வாக்குமூலம்
10. பனையின் இளமைப்பெயர்
    i. பிள்ளை ii வடலி iii கன்று iv குட்டி

பகுதி 2

பின்வரும் பாடலைப்படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதுக

1. அரவு உயர்ந்தோனுடன் மறு சூடு ஆடி
   நீர் வென்ற அந்நாள் அவன் தான் சொன்ன
   விரதம் மொழி தவிராமல் வெம் கானம்
   போய் மீண்டீர் வெய்யோன் உங்கள்
   குரு நிலத்தில் பாதி இனி கொடாது இருந்தால்
   ஆங்கு அவனை கொன்று போரில்
   இரு நிலத்தை ஆள இனி
   துணிவதே கடன் என்றான் எம்பிரான்

1. எம்பிரான் என அழைக்கப்படுபவர் யார்?
2. அரவுயர்ந்தோன் என குறிப்பிடப்படுபவன் யார்?
3. எத்தகைய செயலை கடன் என எம்பிரான் குறிப்பிடுகின்றார்?

2. பின்வரும் வினாவிற்கு விடைஎழுதுக (15புள்ளிகள்)

1. மூத்தம்மா சிறுகதையில் பிரதான கதாபாத்திரங்களான மூத்தம்மா, காசீம், மூத்தவாப்பா ஆகிய கதாபாத்திரங்களின் குணவியல்புகள் பற்றி குறிப்பிட்டு விளக்குக.